


கல்வி பொது தராதரப் பத்திரம் (உயர் தரம்)

# கிறிஸ்தவம்

## வினா விடைகள் – 2023

வெளியீடு : தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்

**கல்வி பொதுத் தராதரப் பத்திர (உயர தர)ப் பரீட்சை - 2023 (2024)**

**கிறிஸ்தவம் I**

## (சரியான விடையின் கீழ் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது)

1. புதிய ஏற்பாட்டிலுள்ள திருவெளிப்பாட்டு நூலின் ஆசிரியராக அறிமுகம் செய்யப்படுபவர்
   (1) புனித யோவான் ஆவார் (2) புனித பேதுரு ஆவார்
   (3) திமோத்தேயு ஆவார் (4) புனித யாக்கோபு ஆவார்
   (5) புனித யூதா ஆவார்

2. கடல் மட்டத்தின் 675 அடி கீழே அமைந்துள்ள இதயத்தின் வடிவம் கொண்டுள்ள கடல்
   (1) சாக்கடல் (2) கலிலேயாக் கடல் (3) மத்தியதரைக் கடல் (4) செங்கடல்
   (5) கள்ப் படல்

3. தாவீதின் பரம்பரையில் இறுதி அரசன்
   (1) யோசியா ஆவார் (2) யோயாக்கின் ஆவார் (3) செதெக்கியா ஆவார்
   (4) சவுல் ஆவார் (5) சாலமோன் ஆவார்

4. தொடக்க நூலின் முதலாம் அதிகாரம் தொடக்கம் மோசேயின் இறப்பு வரையுள்ள பகுதி உள்ளடங்கும் மரபு
   (1) யாவே மரபு ஆகும் (2) யூத மரபு ஆகும் (3) எலொகிம் மரபு ஆகும்
   (4) இணைச்சட்ட மரபு ஆகும் (5) குருக்கள் மரபு ஆகும்

5. படைப்பு பற்றிய முதல் கதையில் 'வானம்' என்னும் சொல்லின் கருத்து
   (1) கிரகங்கள் ஆகும் (2) நீர் ஊற்றுக்கள் ஆகும் (3) மண்ணகம் ஆகும்
   (4) விண்ணகம் ஆகும் (5) மலைகள் ஆகும்

6. பாஸ்கா உணவு வழிபாட்டில் இறைகட்டளையை விரைவில் நிறைவேற்றவேண்டுமென்பது அடையாளப்படுத்தப்படுவது
   (1) கசப்புக் கீரையை உண்ணுதல் மூலம் ஆகும்.
   (2) திராட்சை இரசம் அருந்துதல் மூலம் ஆகும்.
   (3) பாஸ்கா செம்மறியை உண்ணுதல் மூலம் ஆகும்.
   (4) புளிப்பற்ற அப்பத்தை உண்ணுதல் மூலம் ஆகும்.
   (5) காடியைக் குடித்தல் மூலம் ஆகும்.

7. மெசியாவின் ஆட்சியின் வல்லமையையும் அமைதியின் அரசரின் வருகையையும் கொண்டாடுவதற்கு இறைவாக்கினர் செக்கரியாவின் நூலின் 9ம் அதிகாரத்தில் எவ்வாறு அழைப்பு விடுக்கப்படுகிறது?
   (1) ''ஆண்டவர் நம்முடனே'' என்றாகும்.
   (2) ''இருளில் நடந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்'' என்றாகும்.
   (3) ''எமக்கு ஓர் குழந்தை பிறந்துள்ளது'' என்றாகும்.
   (4) ''ஓநாய் செம்மறியாட்டுடன் வாழும்'' என்றாகும்.
   (5) ''மகளே சீயோனே! மகிழ்ந்து களிகூரு'' என்றாகும்.

8. இறைவனின் துன்புறும் ஊழியனைப் பற்றிக் குறிப்பிடும் திருவிவிலிய நூல் எது?
   (1) ஓசேயா (2) ஆமோஸ் (3) எசாயா (4) மலாக்கி (5) நாகூம்

9. சீனாய் உடன்படிக்கை தொடர்பாகப் பின்வரும் வெளிப்பாடுகளைக் கருதுக.

A - சீனாய் உடன்படிக்கை இருசாரார் ஒப்பந்தமாகும்.

B - சீனாய் உடன்படிக்கை உயிர் வாழ்வதொன்றாகும்.

C - சீனாய் உடன்படிக்கை ஒருசாரார் ஒப்பந்தமாகும்.

D - சீனாய் உடன்படிக்கை முறிவுபட்டது மக்களின் குற்றத்தினாலாகும்.

E - சீனாய் உடன்படிக்கையின் மூலம் மக்களுடைய பாவங்களுக்கு மன்னிப்புக் கிடைக்கும்.

இவற்றில் சரியான வெிப்பாடுகளாவன,

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, D ஆகியன மாத்திரம் (3) B, C ஆகியன மாத்திரம்
(4) B, D ஆகியன மாத்திரம் (5) B, E ஆகியன மாத்திரம்

10. 'ஆண்டவர் ஆற்றல் அளிப்பார்' என்னும் பொருள் கொண்ட பெயரை உடைய இறைவாக்கினர் யார்?

(1) எசேக்கியேல் (2) ஒசேயா (3) ஆமோஸ் (4) எசாயா (5) எரேமியா

11. 'மெசபத்தேமியா ஞானம்' பயன்படுத்தப்பட்டது

(1) அரச சபை ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்காகும்.
(2) உலகத்தின் திட்டத்தை விளக்குவதற்காகும்.
(3) ஆட்சிக்குத் தகுதிபெற்றோரைப் பயிற்றுவிப்பதற்காகும்.
(4) நல்லொழுக்க நிலையை விபரிப்பதற்காகும்
(5) அரச ஆவணங்களைக் கையாளும் கலை பற்றிக் கற்பிப்பதற்காகும்.

12. ஞானம் முன்வைத்துள்ள இலக்கிய நடைகள் இரண்டு ஆவன

(1) பாடல்கள் மற்றும் கவிதைகள் ஆகும்.
(2) உவமைகள் மற்றும் பாடல்கள் ஆகும்.
(3) உருவகங்கள் மற்றும் கவிதைகள் ஆகும்.
(4) மேலதிக விபரங்கள் மற்றும் உருவக அணிகள் ஆகும்.
(5) பழமொழிகள் மற்றும் மேலதிக விபரங்கள் ஆகும்.

13. கி.மு. 63 இல் பாலஸ்தீன நாட்டினுள் யூத மக்களுக்கு சமய சுதந்திரம் கிடைத்தது யாருடைய ஆட்சியின் கீழ் ஆகும்.

(1) உரோமையர் (2) கிரேக்கர் (3) எரொதியர்
(4) பாலஸ்தீனர் (5) சமாரியர்

14. எஸ்சேனியருடைய வாழ்க்கை முறை பற்றிய பின்வரும் விடயங்களைக் கருதுக.

A - திருமணம் முடித்தல்

B - உயிர்த்தெழுதல் பற்றிய நம்பிக்கையின்மை

C - வெள்ளை உடை அணிதல்

D - சேர்ந்து உணவருந்துதல்

E - தீய ஆவிகள் பற்றிய நம்பிக்கையின்மை

மேற்கூறிய விடயங்களில் எஸ்சேனியர்களுக்குத் தனித்துவமான விடயங்கள்

(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம் (3) C, D ஆகியன மாத்திரம்
(4) C, E ஆகியன மாத்திரம் (5) D, E ஆகியன மாத்திரம்

15. திருவிவிலிய பாரம்பரியத்திற்கமைய புனித மத்தேயு தமது நற்செய்தியைத் தயாரிப்பதற்கான செல்வாக்கைப் பெற்றுக்கொண்ட நூல் எது?

(1) ஞான இலக்கியம் (2) திருப்பாடல்கள் (3) இறைவாக்கு நூல்கள்
(4) எரேமியா நூல் (5) ஐந்நூல்கள்

16. இரேனியுஸ் போன்ற திருச்சபைத் தந்தையர்கள் குறிப்பிடுவதன்படி புனித யோவான் நற்செய்திக்கான தகவல்களைப் பெற்றுக்கொண்டது

(1) யெகெஸியுஸ்டமிருந்தாகும். (2) பொலிகார்ப்பிடமிருந்தாகும் (3) பபியஸிடமிருந்தாகும்
(4) ஒரிஜினிடமிருந்தாகும் (5) ஜெரோமிடமிருந்தாகும்.

17. மறை அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதன்படி திருத்தூதர்பணிகள் நூல் எழுதப்பட்டிருப்பது

(1) உரோமையில் ஆகும் (2) கிரேக்கத்தில் ஆகும் (3) பாலஸ்தீனாவில் ஆகும்
(4) கலிலேயாவில் ஆகும் (5) எருசலேமில் ஆகும்

18. புனித பவுலின் இரண்டாவது மறைத்தூதுப் பயணத்தில் கலந்து கொண்டவர் யார்?

(1) பர்னபா (2) யோவான் மாற்கு (3) தீத்து (4) லூக்கா (5) எரதஸ்

19. பின்வரும் புனித பவுலின் கடிதங்கள் - திருமுகங்களைக் கருதுக.

A - 1 தெசலோனிக்கர் B - 2 தெசலோனிக்கர் C - 1 கொரிந்தியர்
D - எபேசியர் E - கொலோசேயர்

மேற்கூறிய கடிதங்கள் - திருமுகங்களில் புனித பவுல் தம் கைப்பட எழுதியதாக ஏற்றுக்கொள்ளப்படுபவை

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம் (3) B, C ஆகியன மாத்திரம்
(4) C, D ஆகியன மாத்திரம் (5) D, E ஆகியன மாத்திரம்

20. 'மக்காரியோயி' என்னும் கிரேக்கச் சொல்லின் ஓர் கருத்து

(1) சீடர்கள் என்பதாகும். (2) பின்பற்றுவோர் என்பதாகும். (3) தூயவர்கள் என்பதாகும்.
(4) உரையாளர் என்பதாகும். (5) பேறுபெற்றோர் என்பதாகும்.

21. இயேசுவை முழு உலகிற்கும் இறையாட்சியை வெளிப்படுத்திய ஓர் ஆசிரியராக அறிமுகப்படுத்தியவர் யார்?

(1) புனித மத்தேயு (2) புனித மாற்கு (3) புனித லூக்கா (4) புனித யோவான்
(5) புனித பர்னபா

22. புனித மத்தேயு நற்செய்தியின் 18ம் அதிகாரத்தில் 'சிறுவர்' என அறிமுகப்படுத்தப்படுபவர்கள் யார்?

(1) சிறுபிள்ளைகள் (2) வளர்ந்தோர் (3) இயேசுவைப் பின்பற்றுபவர்கள்
(4) அறிவில் குறைந்த வளர்ந்தோர் (5) இயேசுவைப் பின்பற்றாதோர்

23. பிலாத்துவின் மனைவியின் கனவு தொடர்பாகக் குறிப்பிடும் நற்செய்தியாளர்

(1) புனித மாற்கு ஆவார் (2) புனித லூக்கா ஆவார் (3) புனித பர்னபா ஆவார்
(4) புனித யோவான் ஆவார் (5) புனித மத்தேயு ஆவார்

24. புனித பவுலின் படிப்பினைகளின்படி நம்பிக்கையையும், எதிர்நோக்கையும் அரடத்தமுள்ளதாக்குவது

(1) இரக்கமாகும் (2) அன்பாகும் (3) அனுதாபமாகும்
(4) பொறுமையாகும் (5) செபமாகும்

25. செப்துவாஜிந்த் பிரதியில் இறைவனை 'யாவே' என இடப்பட்டிருந்த எபிரேய பெயரைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்ப்பது

(1) ஆண்டவர் எனவாகும். (2) கிறிஸ்துநாதர் எனவாகும். (3) இயேசு எனவாகும்.
(4) இயேசு கிறிஸ்து எனவாகும். (5) படைத்தவர் எனவாகும்.

26. திருமுழுக்குப் பெறத் தம்மிடம் வந்த இயேசுவைத் திருமுழுக்கு யோவான் தடுக்க முயன்றதன் காரணம்

(1) இயேசுவிடம் எந்தப் பாவமும் இன்மையாகும்.
(2) இயேசு தமது உறவினராக இருந்தமையாகும்.
(3) இயேசு மீட்பர் எனத் திருமுழுக்கு யோவான் அறிந்திருந்தமையாகும்.
(4) இயேசுவின் பகிரங்க வாழ்வு இன்னும் ஆரம்பிக்கப்படாதிருந்தமையாகும்.
(5) இயேசு இதுவரை சாத்தானால் சோதிக்கப்படாதிருந்தமையாகும்.

27. திருவிவிலியத்தில் அறிஞர்கள் எடுத்துக்காட்டுவதன்படி, திவ்விய நற்கருணை பற்றிய கற்பித்தலில் இயேசு பயன்படுத்திய சொல்

(1) அப்பம் என்பதாகும் (2) பலி என்பதாகும். (3) தசை என்பதாகும்.
(4) மன்னா என்பதாகும். (5) உணவு என்பதாகும்.

28. உரோமையில் பல மாகாணங்களை அழிவுக்குட்படுத்தி ஏற்பட்ட தீவைப்பிற்குக் கிறிஸ்தவர்களே பொறுப்புக் கூறவேண்டியவர்களென, அவர்களைக் கடுமையான துன்புறுத்தலுக்குள்ளாக்கியது

(1) முதலாம் கலாபனைக் காலத்திலாகும் (2) இரண்டாம் கலாபனைக் காலத்திலாகும்
(3) மூன்றாம் கலாபனைக் காலத்திலாகும் (4) நான்காம் கலாபனைக் காலத்திலாகும்
(5) ஐந்தாம் கலாபனைக் காலத்திலாகும்

29. முதல் முறையாகக் கிறிஸ்தவ குருக்கள், ஆயர்களைக் கொடூரமாகத் துன்புறுத்த ஆரம்பித்த பேரரசன்

(1) தேசியுஸ் (2) வலேரியன் (3) அவுரேலியன் (4) மாக்சிமியன் (5) தியோகிளிசியன்

30. 'பாவசங்கீர்த்தனம்' (The Confession) மற்றும் 'இறை நகரம்' (The City of God) ஆகிய நூல்களை எழுதித் திருச்சபைக்கு அளித்தவர்

(1) புனித ஜஸ்டின் (2) புனித ஜெரோம் (3) புனித சிறில்
(4) புனித அகுஸ்தினார் (5) புனித அத்தனாசியுஸ்

31. திருச்சபை வரலாந்நினைப் பின்னோக்கிப் பார்க்கும்போது அவதானிக்கமுடிவது திருச்சபைக்கு எதிராக்க கடுமையான தாக்கங்கள் உருவாகியிருப்பது

(1) யூத சமூகத்தினால் என்பதாகும். (2) சதுசேயரால் என்பதாகும்.
(3) பரிசேயரால் என்பதாகும். (4) திருச்சபைக்குள்ளே என்பதாகும்.
(5) உரோமைப் பேரரசினால் என்பதாகும்.

32. கிறிஸ்துவியல் பொதுச்சங்கம் என அறிமுகம் செய்யப்படுவது

(1) லியோனஸ் திருச்சங்கம்
(2) திரிதெந்தீனு திருச்சங்கம்
(3) இலத்திறன் திருச்சங்கம்
(4) முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கம்
(5) கொன்ஸ்தாந்திநோபிள் திருச்சங்கம்

33. முதல் நிசேயா திருச்சங்கத்தின் மூலம் விடை காண்பதற்கு ஏதுவான காரணமாக அமைந்தது

(1) ஆரிய பேதகமாகும் (2) முக்கியமற்ற பேதகமாகும்

(3) இயுத்திகே பேதகமாகும். (4) பெலாஜியன் பேதகமாகும்.

(5) நெஸ்தோரிய பேதகமாகும்.

34. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - வண்டல் கோத்திரத்தினர் உரோமைத் தாக்குவதிலிருந்து விலகி நின்றனர்

B - கி.பி 476 ஆம் ஆண்டளவில் மேற்குப் பேரரசு முழுவதையும் கோத்திரத்தினர் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர்.

C - பெலாஜிய பேதகம் மனித சுபாவம் சென்ப பாவத்தினால் அழிவுற்றது என்ற கொள்கையில் உறுதியாக இருந்தது.

D - ஐந்தாம் நூற்றாண்டு ஆகும்போது பல பேரரசர்கள் கிழக்குத் திருச்சபையின் ஆட்சியாளர்களாகச் செயலாற்றினர்.

E - மூன்றாம் நூற்றாண்டு இறுதியில் பேரரசினால் திருச்சபை துன்புறுத்தல்களுக்கு ஆளாவது முடிவுற்றிருந்தது.

மேற்குறித்த கூற்றுகளில் சரியானவை

(1) A, C ஆகியன மாத்திரம் (2) A, E ஆகியன மாத்திரம் (3) B, D ஆகியன மாத்திரம்

(4) C, E ஆகியன மாத்திரம் (5) D, E ஆகியன மாத்திரம்

35. திருச்சபையில் நிலவிய இறையியலுக்கும், ஆன்மீக புதிய யுகம் ஆகிய திருச்சபைத் தந்தையர்களின் காலத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

(1) நான்காம் நூற்றாண்டிலாகும். (2) ஐந்தாம் நூற்றாண்டிலாகும்.

(3) ஆறாம் நூற்றாண்டிலாகும். (4) ஏழாம் நூற்றாண்டிலாகும்.

(5) எட்டாம் நூற்றாண்டிலாகும்.

36. கிறிஸ்த திருச்சபைக்கும் ஓர்த்தொடொக்ஸ் சபைக்கும் இடையில் ஏற்பட்டிருந்த முரண்பாடுகள் ஓர் ஒருமைப்பாட்டு நிலைக்கு வந்தது

(1) கி.பி. 590 இல் திருத்தந்தை முதலாம் கிரகோரியார் காலத்திலாகும்.

(2) கி.பி. 853 இல் திருத்தந்தை முதலாம் நீக்கிலஸ் காலத்திலாகும்.

(3) கி.பி. 1073 இல் திருத்தந்தை ஏழாம் கிரகோரியார் காலத்திலாகும்.

(4) கி.பி. 1493 இல் திருத்தந்தை ஆறாம் அலெக்சாண்டரின் காலத்திலாகும்.

(5) கி.பி. 1965 இல் திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் காலத்திலாகும்.

37. புனித லொயோலா இக்னேசியஸ்சினால் எழுதப்பட்ட நூல் எது?

(1) நிறைவாழ்வின் வழி (The Way of Perfection)

(2) உள்ளன மாளிகை (The Interior Castle)

(3) இருண்ட இரவு (Dark Night of the Soul)

(4) ஆன்மீகப் பயிற்சிகள் (Spiritual Exercises)

(5) ஆன்மீகப் பாடல் (Spiritual Canticle)

38. திருத்தந்தை பதினோராம் பத்திநாதரால் வெளியிடப்பட்ட சுற்றுமடல்களில் ஒன்று

(1) பாச்செம் இன் டெரிஸ் (அவனியில் அமைதி)

(2) குவாத்திர ஜெசிமோ அன்னோ (நாற்பது ஆண்டுகள்)

(3) றேரும் நோவாறும் (உழைக்கும் மக்கள்)

(4) போப்புளோறும் புறோகிறாசியோ (மக்கள் முன்னேற்றம்)

(5) மானே நோபிஸ்கும் டோமினே (எங்களோடு தங்கும்)

39. கொஸ்மஸ் இன்டிகோ என்னும் உல்லாசப் பயணியின் சான்று இலங்கையருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பது

(1) போரத்துக்கேயர் வருகைப் பற்றி அதில் குறிப்பிடப்படுவதனாலாகும்.

(2) சங்கிலி அரசனின் துன்புறுத்தல் பற்றி அதில் குறிப்பிடப்படுவதனாலாகும்.

(3) கிறிஸ்தவ மறையைத் தழுவிக் கொண்ட இளவரசன் தர்மபாலன் பற்றி அதில் குறிப்பிடப்படுவ தனாலாகும்.

(4) பொலநறுவைக் காலத்தில் வாழ்ந்த கத்தோலிக்கர் பற்றி அதில் குறிப்பிடப்படுவதனாலாகும்.

(5) ஆறாம் நூற்றாண்டில் இலங்கையில் கிறிஸ்தவ பக்தர்கள் வாழ்ந்தமைக்கு சான்றாக இருப்பதனாலாகும்.

40. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த பின்னர் முதல் திருப்பலியை நிறைவேற்றியவர்.

(1) அருட்பணி வின்சென்ற் அடிகளாராவர்

(2) அருட்பணி கொன்சால்வேஸ் அடிகளாராவர்

(3) அருட்பணி சீமன் டீ கொயம்ரா அடிகளாராவர்

(4) அருட்பணி அந்தோனியோ பத்ராம் அடிகளாராவர்

(5) அருட்பணி ஜோன் தவிலா டீகொன்தே அடிகளாராவர்

41. பதினாறாம் நூற்றாண்டில் தென் கிழக்கு இந்தியக் கரையோரத்தில் வாழ்ந்த பரவ குல மற்றும் கரையார் குல மக்கள் கிறிஸ்தவ மதம் பற்றிப் புரிந்துணர்ந்து திருமுழுக்குப் பெற்றதைக் கேள்வியுற்ற மன்னார்த் தீவின் கரையோர மக்கள் தங்களுக்கும் மறையைப் போதிக்க வரும்படி அழைப்பு விடுத்தது.

(1) அருட்பணி கொன்சால்வேஸ் அடிகளாருக்காகும்.

(2) அருட்பணி பிரான்சிஸ் சவேரியார் அடிகளாருக்காகும்.

(3) அருட்பணி ஜோசப்வாஸ் அடிகளாருக்காகும்.

(4) அருட்பணி ஜோன் ஸ்ரீபன் அடிகளாருக்காகும்.

(5) அருட்பணி ஜோசப் மேரிபிராவி அடிகளாருக்காகும்.

42. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - கல்வித்திட்ட ஒழுங்கமைப்புகள் வீழ்ச்சியடைந்தன.

B - கத்தோலிக்க சமய வழிபாடுகளுக்கு அனுமதி கிடைத்தது.

C - கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு செபங்களைக் கற்றுக்கொடுக்க முடியவில்லை.

D - கிறிஸ்தவர்கள் தமது கழுத்தில் செபமாலையை அணிந்திருந்தனர்.

E - 16ம் நூற்றாண்டில் ஒல்லாந்து மதத்தைத் தழுவினர்.

F - அஞ்ஞான ஔசதய மற்றும் கத்தோலிக்க ஆலயம் என்னும் நூல்கள் வெளிவந்தன.

மேற்குறித்த கூற்றுகளில் சரியானவை

(1) A, B, C ஆகியன மாத்திரம் (2) A, E, F ஆகியன மாத்திரம் (3) B,C,D ஆகியன மாத்திரம்

(4) C, D, E ஆகியன மாத்திரம் (5) D,E, F ஆகியன மாத்திரம்

43. ஒல்லாந்தர் இலங்கைக் கத்தோலிக்கரைத் துன்புறுத்தியதற்கான ஓர் காரணமாக அமைந்தது.
   (1) கிறிஸ்தவ மறை கருமங்களுக்காகத் தேசிய மொழியைப் பயன்படுத்தியமையாகும்.
   (2) இலங்கையில் கறுவா ஏகபோகம் கத்தோலிக்கர் மத்தியில் நிலவியமையாகும்.
   (3) போர்த்துக்கேயர் கத்தோலிக்க மறையை முன்னிட்டு இந்நாட்டு பௌத்தர்களைத் துன்புறுத்தியமையாகும்.
   (4) கண்டி இராச்சியத்தில் வைசூரி நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு கிறிஸ்தவர்கள் உதவியமையாகும்.
   (5) கத்தோலிக்கத் திருமறை இந்நாட்டின் கத்தோலிக்கருக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையே நல்ல நட்புறவை ஏற்படுத்துமென நினைத்தமையாகும்.

44. 18 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் சமய செயற்பாடுகளை சுதந்திரமாக நடாத்திச் செல்வதற்கு கத்தோலிக்கக் குருக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.
   (1) விலியம் கிளட்வின் மூலமாகும்.
   (2) அடம் வெஸ்டர் வோல்ட் மூலமாகும்.
   (3) தொன் அல்போன்சு பெரேரா மூலமாகும்.
   (4) ஸ்கொலகல் ஆணைக்குழு மூலமாகும்.
   (5) ஜேம்ஸ் ஸ்ரூவேட் மூலமாகும்.

45. திருவிவிலியமத்தை சிங்கள மொழியில் மொழிபெயர்க்க வழிகாட்டல் கிடைத்தது.
   (1) வில்லியம் டொல்ப்பிறியிடமிருந்தாகும்.
   (2) பிரான்சிஸ்கோத அல்மேதாவிடமிருந்தாகும்.
   (3) விக்டர் லொபானோவிடமிருந்தாகும்.
   (4) கொன்ஸ்தான்தீனுவிடமிருந்தாகும்.
   (5) அருட்பணி ஜோன் தவிலா டீ கொன்தே அடிகளாரிடமிருந்தாகும்.

46. இலங்கையில் வேற்றுநாட்டு ஆளுனருக்கு எதிராக ஒழுங்கு செய்த அறிக்கையைத் தனது காலணியினுள் மறைத்துக் கொண்டு பிரித்தானியாவிற்குக் கொண்டு சென்றவர்.
   (1) ஜே. ஏ. எல் குறே (2) ஸ்ரீமத் ஜேம்ஸ் பீரிஸ் (3) ஈ. டபிள்யூ. பெரேரா
   (4) அல்பட் ஏ. விக்கிரமசிங்க (5) அருட்பணி கிறிஸ்டோப்பர் பொன்ஜின் அடிகளார்

47. சுதந்திரத்தின் பின் இலங்கை கத்தோலிக்க திருச்சபை முகம் கொடுத்த ஓர் பிரச்சினை
   (1) மறைபோதித்தல் செயற்பாடுகளைத் தடை செய்தமை
   (2) திருப்பலியை இலத்தின் மொழியில் நடாத்த நேர்ந்தமை
   (3) கிறிஸ்தவ சமயத்தவர்கள் மீதான இரக்கமற்ற விமர்சனங்களை மேற்கொள்ளப்பட்டமை
   (4) சமய செயற்பாடுகள் மற்றும் விழாக்கள் நடாத்துவதில் வரையறைகள் விதிக்கப்பட்டமை
   (5) சமய செயற்பாடுகளுக்காக வெளிநாட்டுப் பண உதவிகள்

48 கத்தோலிக்க பாடசாலைகளில் மாணவ மாணவியர்களுக்கு சமயக்கல்வி உரிமையற்றுப் போவதற்கும் பல பாடசாலைகளில் கத்தோலிக்க அதிபர்கள் இல்லாமைக்கு முக்கிய காரணம்
   (1) கிறிஸ்தவ சமய இயக்கங்களிடையே ஏற்பட்ட பிரிவினையாகும்.
   (2) 1960ல் சமயப் பாடசாலைகள் அரசமயமாக்கப்பட்டமையாகும்.
   (3) 1867ல் முன்வைக்கப்பட்ட உதவிபெறும் பாடசாலை முறையாகும்.
   (4) 1970ம் ஆண்டு இறுதிக்கட்டத்தால் ஆரம்பிக்கப்பட்ட சமூகப் பிரச்சினையாகும்.
   (5) சில போர்த்துக்கேய படைவீரர்களின் கொடூர செயல்களின் குற்றச்சாட்டு கத்தோலிக்கர்மீது சுமத்தப்பட்டமையாகும்.

49. மனிதனுக்கு மட்டுமே உரிய ஓர் கொடை எது?

(1) செவிமடுக்கும் ஆற்றல்
(2) சில பிரதேசங்களிடையே பயணிக்கும் ஆற்றல்
(3) சுதந்திரமாக முடிவெடுக்கும் ஆற்றல்
(4) ஓர் குடும்ப வாழ்வை வாழும் ஆற்றல்
(5) தன் இனத்தை இடைவிடாது நிலைத்திருக்கச் செய்யும் ஆற்றல்

50. திருச்சபையின் ஓர் அத்தியாவசியப் பண்பு

(1) திருவழிபாடு
(2) அப்போஸ்தலிக்கம்
(3) மரியன்னை பக்தி
(4) கோயில் திருவிழாக்கள்
(5) திவ்விய நற்கருணைத் திருவிழா

---

## கிறிஸ்தவம் II

### பகுதி I

**01. (i) திருவிவிலியத்தின் கிரேக்க பிரதியையும் இலத்தீன் பிரதியையும் அழைக்கும் பெயர்களை வெவ்வேறாக எழுதுக.**

(1) கிரேக்கச் சொல் - செப்துவாஜிந்த்
(2) இலத்தின் சொல் - வுல்காத்தா அல்லது வல்கேட்

**(ii) சாக்கடலின் இயற்கை அமைப்பு பற்றி இரு விடயங்கள் எழுதுக.**

(1) கடல் மட்டத்திலிருந்து 1300 அடி கீழே அமைந்துள்ளது.
(2) 27% உப்பு செறிந்துள்ளமையால் இங்கு மீன்களோ எந்தவொரு உயிரினமோ இல்லை.
(3) சாக்கடலின் மேற்பரப்பில் எந்த மனிதனும் மூழ்காமல் மிதக்க முடியும்.

**(iii) 'தியோ', 'னெட்மா', 'தியோப்னெட்டோஸ்' என்னும் கிரேக்க சொற்கள் மூன்றினதும் கருத்துக்களை எழுதுக?**

(1) 'தியோ' எனப்படுவது இறைவனாகும்.
(2) 'னெட்மா' எனப்படுவது மூச்சாகும்.
(3) யாக்கோபுவுக்கு முதிர்ந்த வயதில் யோசேப்பு பிறந்தமை
(4) 'தியோப்னெட்டோஸ்' எனப்படுவது இறைவனால் மூச்சு விடப்பட்டது.

**(iv) திருவிவிலியத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இளம் பராயத்தினரான உமது வாழ்வை வெற்றிகரமாக்கிக் கொள்ளக்கூடிய வழிகள் நான்கினை விளக்குக.**

- திருவிவிலியத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இளம் பராயத்தினரான எமது ஆன்மீக வாழ்வில் வழிதவறாது, நேரிய பாதையில் இறைவன் காட்டும் பாதையில் வழிநடக்க முடியும்.
- எப்போதும் மனச்சான்றின்படி செயற்படுவதற்கு தூண்டப்படுவதால் வாழ்வில் தவறிழைக்கும் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுகிறது.
- திருவிவிலியத்தில் சந்திக்கும் குலமுதுவர்கள், வீரத் தலைவர்கள், இறைவாக்கினர்களின் முன்மாதிரிகைகள் ஆழ்ந்த விசுவாசம், மனத்திடன், நேர்மை, உண்மையுடமை என்பனவற்றை எமது வாழ்விலும் வளர்த்துக் கொள்ள முற்படுவதால் வாழ்வில் வெற்றிகாண முடிகிறது.
- அன்பு, மன்னிப்பு போன்ற திருவிவிலிய படிப்பினைகள் ஊடாக அனைவரோடும் ஒற்றுமையாக வாழ முடிகிறது.

- தனிச் செபம் மற்றும் குழுச் செபம் போன்றவற்றில் ஈடுபட வழிகாட்டுகின்றது.
- தாழ்ச்சி, தன்னல மறுப்பு போன்ற விழுமியப் பண்புகளின்படி வாழ வழிகாட்டுகின்றது.
- அன்றாட வாழ்வின் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க வழிகாட்டுகின்றது.

**02. (i) விடுதலைப் பயண நூலில் குறிப்பிடப்படும் 10 பெரும் துன்பங்களில் 9ம், 10ம் பெருந் துன்பங்களின் பெயர்களைத் தருக?**

- 9ம் பெரும் துன்பம் காரிருள்
- 10ம் பெரும் துன்பம் தலைமகன் சாவு

**(ii) 'மாசா', 'மெரிபா' என்னும் எபிரேய சொற்களின் கருத்துக்களை எழுதுக?**

- மாசா - சோதித்தல்
- மெரிபா - வாதாடுதல்

**(iii) பெரிய இறைவாக்கினர் மூவரினதும் பெயர்களைத் தருக.**

(1) எசாயா (2) எரேமியா (3) எசேக்கியேல்

**(iv) நாளைய உலகிற்கு அடியெடுத்து வைக்கும் நீர் இறைவாக்கினரின் முன்மாதிரிகைகள் எவ்வாறு பின்பற்றி செயற்படுவீர் என்பதை நான்கு விடயங்களில் விளக்குக.**

- இறைவாக்கினர்கள் என்பவர்கள் இறைவனின் செய்தியை எடுத்துரைப்பவர்கள், இறைவனைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள், நானும் அவர்களைப் போலாக அவர்களின் முன்மாதிரிகை களைப் பின்பற்றுவது என்பது இன்றைய நவீன உலகில் மிகவும் கடினமானதும், தியாகம் நிறைந்ததுமாகும்.
- இறைவாக்கினரிடம் காணப்பட்ட துணிவு, கடின மனம் கொண்டவர்களிடம் சென்று பேசக் கூடிய அச்சமின்மை என்னும் பண்புகளைத் தூய ஆவியானவரிடம் கேட்டு நான் வேண்டுவேன்.
- தவறுகளையும் அநீதிகளையும் காணும் சந்தர்ப்பங்களில் துணிவுடன் பேச முன்வருவதற்கு, முதலில் நான் என் வாழ்வில் இப்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- இறைவாக்கினர் எப்போதும் இறைவனோடு ஒன்றித்து வாழ்ந்தது போல, நானும் செபத் தால் இறைவனோடு ஒன்றித்திருப்பேன்.
- இன்று பெருகிவரும் பிரிவினைச் சகோதரர்கள் முன்னிலையில் சரியானதைத் தேர்ந்து கொள்ளக் கூடிய இறை ஞானமும் உறுதியான விசுவாசமும் உடையவர்களாக இருத்தல்.
- இறைவாக்கினர்கள் வாழ்ந்த ஏழ்மையான வாழ்க்கை முறையைப் பின்பற்றுதல்.
- இறைவாக்கினர்கள் ஒழுக்கம் பற்றி போதித்தது மட்டுமல்லாது நேரிய, ஒழுக்கமான வாழ்க்கை வாழ்ந்தது போல, பல்வேறு பாவச்சோதனைகளுக்கு முகங்கொடுக்க நேரிடினும் ஒழுக்கமிக்கவர்களாக வாழ்தல்.
- உடன்படிக்கை வாழ்வை நினைவுப்படுத்தி, மக்களை ஒரே கடவுள் கொள்கையைப் பின்பற்ற வலியுறுத்தியது போல, உறுதியான இறை நம்பிக்கை, உண்மையான வழிபாடு என்பவற்றில் நிலைத்திருத்தல்.

**03. (i) திருத்தொண்டரான பிலிப் இறை அரசின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் இரண்டினை எழுதுக?**

- சமூகப்பணி - பந்தியில் பரிமாறுதல்
- திருமுழுக்குக் கொடுத்தல் - மறையைப் போதித்தல்

**(ii) இயேசுவில் நம்பிக்கை கொண்ட புற இனத்தார் தொடர்பாக எருசலேம் சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

- விருத்தசேதனம் தேவையற்றது.
- சிலைகளுக்குப் படைக்கப்பட்டவைகளை உண்ணுவதைத் தவிர்த்தல்.
- தகாத உறவுகளை (பரத்தமையை) தவிர்த்தல்.
- கழுத்து நெரிக்கப்பட்ட செத்த மிருகங்களின் இறைச்சியை உண்ணாதிருத்தல்.
- இரத்தத்தை தவிர்த்தல்.

**(iii) பெந்தகோஸ்தே நாளில் தூய ஆவியின் வருகையின் பின்பு புனித பேதுரு ஆற்றிய அருளுரையில் அடங்கும் மூன்று விடயங்களை எழுதுக.**

- கிறிஸ்துவே யூத மக்கள் எதிர்பார்த்த மெசியா
- யூதர்களினால் இயேசு கொல்லப்பட்டார்.
- கடவுள் அவரை உயிர்த்தெழச் செய்தார்.
- இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குத் தாங்களே சாட்சிகள் என பேதுரு தைரியத்துடன் வெளிப்படுத்தினார்.

**(iv) புனித பேதுருவின் தலைமைத்துவப் பண்புகளின் மூலம் நிகழ்கால சமூகத் தலைவர்கள் கற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் நான்கினை விளக்குக.**

- புனித பேதுருவைப் போன்று ஒரு தலைவர் பணியாளர் தலைமைத்துவத்தைப் பின்பற்றி முன்மாதிரிகையுள்ளவராக சமூகப்பணிகளில் ஈடுபடல்.
- பிறரது தேவைகளைப் பொறுமையாக செவிமடுத்து, அவர்களது தேவைகளை நிறைவேற்றுதல்.
- புனித பேதுரு கிறிஸ்து இயேசுவில் கொண்டிருந்த அன்பு, பிரமாணிக்கம் என்னும் பண்புகளைப் பின்பற்றி மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக வாழுதல்.
- புனித பேதுருவைப் போன்று நேர்மை, புனிதத் தன்மை, அர்ப்பணிப்பு, இறை சித்தத்திற்கு கீழ்ப்படிதல் உள்ளவர்களாக, தலைமைத்துவத்தில் கொண்டிருக்க வேண்டிய பணியாளனுக் குரிய பண்புகளுடன் செயற்படுதல்.
- தனக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் பொறுப்புணர்ச்சியுடன் நிறை வேற்றுதல்.
- வேற்றுமை பாராது அனைவரையும் சமமாக ஏற்றுக் கொள்ளுதல்.

## பகுதி II

**04. (i) சமநோக்கு நற்செய்திகள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிட்டு, சமநோக்கு நற்செய்திக்கும், புனித யோவான் நற்செய்திக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள் நான்கினை விளக்குக.**

- மத்தேயு நற்செய்தி, மாற்கு நற்செய்தி, லூக்கா நற்செய்தி.
- சமநோக்கு நற்செய்தி, யோவானின் நற்செய்தி ஆகிய இரண்டு நற்செய்திகளும் திருமுழுக்கு யோவானின் பணியை முன்வைத்தல் மற்றும் முதல் அதிகாரங்களில் இயேசு தனது பணியை ஆரம்பிப்பதற்கு முன் திருமுழுக்கு யோவான் சிறைப்படுத்தப்பட்டார் என்பதையும் காட்டுகிறது.
- சமநோக்கு நற்செய்தி மூன்றும், யோவானிக் நற்செய்தியாக நான்கு நூல்களிலும் இயேசுவின் முதல் சீடர்கள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.
- ஐயாயிரம் பேருக்கு உணவு வழங்குதல், கடல் மீது நடத்தல் ஆகிய புதுமைகள் சமநோக்கு, மற்றும் யோவான் ஆகிய நற்செய்தி யாவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இயேசுவின் பாடுகள், மரணம் உயிர்தெழுதல் தொடர்பான நிகழ்வுகள் சமநோக்கைப் போன்று யோவானின் நற்செய்தியிலும் முன்வைக்கப்படுகின்றது.

**(ii) இயேசுவின் வாழ்க்கை முன்மாதிரிகையைப் பின்பற்றி நற்செய்தியைப் போதிக்கும் ஒருவரிடத்தில் இருக்க வேண்டிய பண்புகள் ஐந்தினை விளக்குக.**

**இரக்கமும் அக்கறையும்**

- ஒதுக்கப்பட்டவர்கள், நோயுற்றவர்கள் மற்றும் ஏழைகள் மீது மிகுந்த இரக்கத்தைக் காட்டினார். ஒரு நற்செய்தி அறிவிப்பாளர் கிறிஸ்துவின் இரக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில், மற்றவர்களிடம் உண்மையான அக்கறையும் அனுதாபமும் கொண்டிருத்தல்.

**மனத்தாழ்மை**

- இயேசு தொடர்ந்து மனத்தாழ்மையை வெளிப்படுத்தினார். தன்னலமின்றி மற்றவர்களுக்கு சேவை செய்தார். ஒரு நற்செய்தி அறிவிப்பாளர் மனத்தாழ்மைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஆணவம் அல்லது தன்மனை உயர்த்துவதைத் தவிர்க்க வேண்டும்.

**அன்பு**

- இயேசு தனத போதனைகளின் மையக் கொள்கையாக அன்பை வலியுறுத்தினார். ஒரு நற்செய்தி அறிவிப்பாளர் மற்றவர்களிடம் நிபந்தனையற்ற அன்பைக் காட்ட வேண்டும். தமக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு கூட கிறிஸ்துவின் தியாக அன்பைப் பிரதிபலிக்க வேண்டும்.

**நேர்மை**

- இயேசு நேர்மையான வாழ்க்கையை வாழ்ந்தார். அவருடைய போதனைகளுடன் தம் செயல்களை சீரமைத்தார். ஒரு நற்செய்தி அறிவிப்பாளர் தனது வார்த்தைகளிலும் செயல்களிலும் நேர்மை, உண்மை உடையவராக விளங்குதல்.

**அதிகாரத்துடன் கற்பித்தல்**

- இயேசு தனது ஆழமான ஆன்மீக வாழ்வின் ஊடாக அதிகாரத்துடன் கற்பித்தார். ஒரு நற்செய்தி அறிவிப்பாளர் நம்பிக்கையுடன் நற்செய்தியின் உண்மைகளை அறிவிக்க வேண்டும். மறை மற்றும் விசுவாசத்தின் ஆழமான புரிதலோடு பிறருக்கு எடுத்துரைக்க வேண்டும்.

**பொறுமை மற்றும் கனிவு**

- இயேசு பொறுமை மற்றும் கனிவுடன், குறிப்பாக கற்பித்தல் மற்றும் மக்களுடன் பழகுவதில் முன்மாதிரிகை காட்டினார். ஒரு போதகர் மற்றவர்களை வழிநடத்துவதிலும், திருத்துவதிலும் பொறுமையையும், கனிவையும் கடைபிடிக்க வேண்டும்.

**விடாமுயற்சி மற்றும் கனிவு**

- இயேசு பல சோதனைகளையும் சவால்களையும் எதிர்கொண்டார். ஆனால், அவருடைய பணியில் உறுதியாக இருந்தார். ஒரு நற்செய்தி அறிவிப்பாளர் விடா முயற்சியை கொண்டிருக்க வேண்டும். கஸ்டங்களை சகித்துக் கொண்டு, தடைகள் இருந்தாலும் நற்செய்தியை பரப்புவதில் உறுதியாக இருக்க வேண்டும்.

**செப வாழ்க்கை**

- கடவுளுடன் தொடர்புகொள்வதற்கான வழிமுறையாக இயேசு செபத்திற்கு முன்னுரிமை அளித்தார். ஒரு நற்செய்தி அறிவிப்பாளர் தன்னுடைய பணியில் கடவுளிடம் இருந்து வழிகாட்டுதலையும், பலத்தையும் பெற வலுவான செப வாழ்க்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**பணியாளர் தலைமைத்துவம்**

- இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவுவதன் மூலம் பணியாளர் தலைமைத்துவத்திற்கு முன்மாதிரிகை காட்டினார். ஒரு நற்செய்தி அறிவிப்பாளர் மற்றவர்களுக்கு சேவை செய்வதன் மூலம் வழிநடத்த வேண்டும். சுய தேவைகளை விட பிறரது தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

**மன்னிப்பு**

- இயேசு தமக்கு அநீதி இழைத்தவர்களை மன்னித்து, கருணை காட்டினார். ஒரு நற்செய்தி அறிவிப்பாளர் கிறிஸ்துவின் மனநிலையை பின்பற்ற வேண்டும். பிறரை மன்னித்து, நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

**05. (i) எருசலேம் பொதுச் சங்கம் நடந்தேறிய ஒழுங்கு முறையை ஐந்து விடயங்களில் விபரிக்குக.**

- கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு நீண்ட விவாதத்திற்கான வசதி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருத்தல்.
- வாதப் பிரதிவாதத்திற்கான சந்தர்ப்பத்தைத் திட்டமிடல்.
- பேதுரு சபையை விளித்தல்.
- யூதர்களுக்கும் பிற இனத்தவருக்கும் இறைவன் தூண ஆவியை வழங்கினார் என்பதையும் நம்பிக்கையைக் காரணமாகக் கொண்டு புறவினத்தாரின்மனத்தினைத் தூய்மைப்படுத்தியதாகச் சபையில் முன்வைத்தல்.
- மேலும் யூதரைப் போன்று பிற இனத்தவரும் மீட்படைவது இயேசுவின் அருளால் என்பதையும் நம்புவதற்குச் சபைக்கு அழைப்பு விடுத்தல்.
- பவுலும், பர்னபாவும், தம்மைக் கொண்டு இறைவன் புற இனத்தவர் மத்தியில் நிகழ்த்திய மகிமையான, புதுமையான விடயங்கள் பற்றியதுமான கருத்துக்களை வலியுறுத்தல்.
- யாக்கோபு பேதுருவின் பேச்சை ஆமோதித்து, இறைவாக்கினரின் வார்த்தைகளில் அறிவுளை வழங்குதல்.

**(ii) புனித பவுலின் வாழ்க்கையிலிருந்து ஒரு கிறிஸ்தவன் பெற்றுக் கொள்ளக் கூடிய முன் மாதிரிகைகள் ஐந்தினை விளக்குக.**

- தைரியமாக நற்செய்திக்காகத் தன்னை அர்ப்பணித்தல்.
- நற்செய்திப் பணியை முன்னெடுத்துச் செல்ல வீரத்துடன் செயற்படுதல், எதிலும் பின் வாங்காமை.
- தன்னை முற்றாக அர்ப்பணித்தல், சுய நலம் மறத்தல்.
- பிரமாணிக்கமாகத் தனது பணியில் செயற்படுதல்.
- இறை விசுவாசம், இறைபயம், பக்திகைக் கடைப்பிடித்தல்.
- ஞானத்துடன் செயற்படுதல், சரியான தீர்மானங்களை எடுத்தல்.
- உண்மை, நேர்மையுடையவர்களாயிருத்தல்.
- இலட்சியத்துடன் நேரான பாதையைக் கடைப்பிடித்து வாழுதல்.
- ஒற்றுமையாகப் பிறர் அன்புடன், பிறருக்கு நல்வழி காட்டியும், தவறிழைத்தபோது தன் குற்றத்தை ஏற்றுக் கொண்டும் நன்முன்மாதிரியாக வாழுதல்.
- தியாக மனப்பான்மையைக் கொண்டிருத்தல்.

**06. (i) புனித பவுல் இயேசுவின் தாழ்மை பற்றி பிலிப்பியர் சமூகத்திற்கு முன்வைத்த படிப்பினைகள் ஐந்தினை சுருக்கமாக விளக்குக.**

- கிறிஸ்து கடவுள் வடிவில் இருப்பினும் இறைவனுக்கு இணையாயிருக்கும் நிலையைத் தியாகம் செய்து அடிமையின் வடிவம் எடுத்து எமக்கு ஒப்பான உருவில் தோன்றினார்.
- மனித உருவில் இருக்கும் அவர் சிலுவைச் சாவு வரை கீழ்ப்படிந்து தனது தாழ்ச்சியை வெளிப்படுத்தினார்.
- கிறிஸ்து மாற்ற முடியாத இறைத் தன்மையைக் கொண்டவராவர், தனக்கு உரிமை யான இறைத் தன்மையை தனது விருப்பத்தோடு தியாகம் செய்து எமக்கு ஒப்பான மனிதனாக அந்நிலையிலேயே வந்து அடிமையின் வடிவம் எடுத்து கீழ்ப்படிந்தார்.
- கிறிஸ்துவின் முன்மாதிரிகையினாலேயே கிறிஸ்தவனுக்கு மிக உயர்ந்த தன்மை கிடைக்கிறது.
- மானிட உரு எடுத்த இறைமகன் கீழ்ப்படிதலின் பிரதிவிம்பம் ஆவார்.
- அவர் இறைத்தந்தைக்குக் கீழ்ப்படிவது அதன் உச்சமட்டத்திலிருந்தே ஆகும்.

- இறைவனின் திட்டத்திற்குத் தலைசாய்க்கும் அவர் மரணத்திற்கு மட்டுமல்ல நிந்தனைக்குரிய மரணமாகக் கருதப்பட்ட சிலுவை மரணம் வரை பணிந்து கீழ்ப்படிந்தார்.
- கிறிஸ்துவின் தாழ்மையினாலேயே தனது வெறுமையாக்கலினுள் எந்தவொரு மனிதருக்கும் கிடைக்காத தெய்வீகத் தன்மை அவருக்குக் கிடைத்தது.
- இறைவன் அவருடைய உடலை அழிவுக்குட்படுத்தாமல் உயிர்த்தெழச் செய்தார்.
- அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அளித்தார்.
- கிறிஸ்துவின் தாழ்ச்சி காரணமாகவே வெறுமையாக்கலின் மூலமாக எந்த ஒரு மனிதனுக்கும் கிடைக்காத பாக்கியம் அவருக்குக் கிடைத்தது.
- அவருக்கு அளித்த புதுப் பெயர் 'இயேசு ஆண்டவர்' என்பதாகும்.
- அனைவரும் இந்த உன்னத பெயரின் முன்பே மண்டியிடுவர்.
- இந்த உன்னத பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் சகலரும் இயேசு கிறிஸ்து ஆண்டவர் என்று இறைவனின் மகிமைக்காக எல்லா நாவுமே அறிக்கையிட வேண்டும்.
- கிறிஸ்துவின் வாழ்க்கையில் அவர் மனிதர் மீது அதிகாரத்தைச் செலுத்துவதை விட அவர்களுக்குப் பணி செய்வதற்கு விரும்பினார். அவர் வாழ்ந்தது தனது விருப்பத்திற்காக அல்ல. இறைத்தந்தையின் விருப்பத்திற்கே ஆகும்.
- தன்னை உயர்த்துவதற்குப் பதிலாக மக்களுக்காகத் தன்னைத் தாழ்த்திக் கொண்டு தனக்குரிய உரிமையைக் கைவிட்டார்.

**(ii) தாழ்மை என்னும் பண்பை சவால்கள் நிறைந்த இன்றைய சமுதாயத்தில் உம்மால் செயற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் ஐந்தினை விளக்குக.**

- தனது குறை குற்றங்களை ஏற்றுக் கொள்ளுதல்.
- மற்றவர்களது திறமைகளைக் காணும் போது பொறாமை கொள்ளாது, அவற்றைப் பாரட்டி உற்சாகமூட்டி உதவுதல்.
- மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய நன்மையானவற்றை வாழ்க்கைக்கு ஏற்றுக் கொள்ளுதல்.
- மற்றவர்களின் தேவைகளை காணும்போது பணிவுடன் அவற்றை நிறைவேற்ற முன்வருதல்.
- உயர்வு, தாழ்வு பாராது அனைவரையும் ஏற்றுக் கொள்ளுதல், செவிமடுத்தல்.
- பிறரின் குற்றங் குறைகளை காணும்போது அன்புடன் அவற்றை சீர்செய்து கொள்ள உதவுதல்.
- தனது சேவையில், தொழிலில், பிறர் குறை காணும்போது அவற்றை திருத்திக் கொள்வது தேவையெனில் அதற்கு உடன்படுதல்.

**07. (i) அலெக்சாந்திரியாவில் புனித அத்தனாசியாரின் வாழ்க்கை பற்றி சுருக்கமாக அறிமுகப்படுத்தி, அவர் கத்தோலிக்க திருச்சபைக்கு அளித்த பங்களிப்பு பற்றி மூன்று விடயங்களில் விளக்குக.**

- அலெக்சாந்திரியாவில் பிறந்தார். இவர் சிறு வயது முதல் தவ வாழ்வில் பற்று வைத்திருந்தார்.
- அப்போஸ்தலிக்க மறையைப் பாதுகாப்பதற்காக முயற்சி எடுத்தமையால் துன்புறுத்தல்களுக் கும், நாடு கடத்தலுக்கும் உள்ளானார்.
- மறை சார்ந்த கோட்பாடுகள் வழியாக மறையைப் பாதுகாப்பதில் அத்தனாசியார் முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டார்.
- திருச்சபையானது மே மாதம் 2ம் திகதி இவரின் திருவிழாவைக் கொண்டாடுகிறது.

**பங்களிப்பு**

- அத்தனாசியார் திருத்தொண்டராக இருந்தபோது அலெக்சாந்திரியாவின் ஆயரின் செயலாளராகப் பணியாற்றினார்.
- கி.பி 325இல் இடம் பெற்ற நிசேயா பொதுச் சங்கத்தில் ஆரிய பேதகத்திற்கு எதிராக செயற்பட்டார்.
- கிறிஸ்து பிதாவிலிருந்து செனித்தவர் எனினும் உண்டாக்கப்பட்டவர் அல்ல, பிதாவோடு ஒரே பொருளானவர் எனும் நிசேயா விசுவாசப் பிரமாணத்தின் முக்கிய இறையியல் எண்ணக்கருவைத் திருச்சபைக்கு அத்தனாசிரியார் கொடையாக வழங்கியுள்ளார்.
- அத்தனாசிரியார் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட தொனிப் பொருளில் திருவிவிலியத்தை அறிமுகப்படுத்தினார்.
- இறையியலாளரான அத்தனாசிரியார் கத்தோலிக்கத் திருச்சபையின் மரபு ரீதியான நம்பிக்கை யின் தந்தை என அழைக்கப்படுகின்றார்.

**(ii) இறை அரசின் வளர்ச்சிக்காக உமது பிரதேசத்தில் வாழும் முதியோர்களின் நலன் கருதி நீர் வழங்கும் பங்களிப்புகள் ஐந்தினை விளக்குக.**

- முதியோருக்குத் தேவையான உணவு, வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு, பராமரிப்பு இல்லாத போதிலும் வயோதிப இல்லங்களில் நோயுற்ற நிலையில் இருப்போருக்கு வைத்திய வசதிக்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல்.
- இல்லங்களில் குடிசைக் கைத்தொழில்களில் ஈடுப்படக்கூடிய சுகதேகிகளான முதியோருக்கு, அவ்வித வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களின் நாளாந்த வாழ்க்கைக்கு வருவாயை அமைத்துக் கொடுத்தல்.
- தனிமையில் வாழும் முதியோரை அடிக்கடி சந்தித்து அவர்களின் நலன் விசாரித்து, உரையாடி அவர்களை மகிழ்வித்தல்.
- வின்செந்தி பாவுலு சபை, மரியாயின் சேனை, திரு இருதய சபை போன்ற பக்திச் சபைகளின் துணையுடன் முதியோருக்கு அதிகளவான ஆன்மீக, சரீர உதவிகளை பெற்றுக் கொடுக்க அச்சபைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தல்.
- பங்குத் தந்தையின் உதவியுடன் ஆன்மீக தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல்.
- நடமாடும் மருத்துவ சேவைகளை அவர்களுக்காக ஒழுங்கு செய்தல்.

**08. (i) பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் கல்வி முறை பற்றி ஐந்து விடயங்களில் விளக்குக.**

- இலங்கையின் கல்விக்காக ஒழுங்கமைக்கப்பட்ட மத்திய பாடசாலை ஆணைக்குழு மூலம் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- கொழும்பு அக்கடமி மிகவும் உயர்மட்டத்தில் பேணப்பட்ட பாடசாலையாக மாறியமை.
- ஆசிரியர் பயிற்சிக்காக சாதாரண பாடசாலை ஆரம்பிக்கப்பட்டமை.
- கல்வியை போதிப்பதற்காக மத்திய பாடசாலைகள் மூன்று (காலி, கண்டி, கொழும்பு) அமைக்கப்பட்டமை.
- கொழும்பிலும் கண்டியிலும் உயர் மகளிர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை.
- அருட்தந்தை கிறிஸ்தோபர் பொன்ஜின் அடிகளார் இலங்கையில் உதவிப் பெறும் பாடசாலை முறையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இருந்தார்.
- அனைத்து மதத்தவர்களுக்கும் பாடசாலைகளை ஆரம்பிக்க அனுமதி கிடைத்தமை.
- துறவற சபைகளின் வருகைக்கு பின் கல்வியில் புதுப் பொலிவு ஏற்படல்
- ஆங்கில மொழி மூல கல்வியில் விருத்தி ஏற்படல்.

**(ii) புனித யோசேப்வாஸ் அடிகளார் இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகள் ஐந்தினை குறிப்பிட்டு, அவற்றை முன்மாதிரிகையாகக் கொண்டு இலங்கைத் திருச்சபைக்காக உம்மால் செய்யக்கூடிய செயல்கள் ஐந்தினை விளக்குக.**

**புனித யோசேப்வாஸ் அடிகளார் இலங்கைத் திருச்சபைக்கு ஆற்றிய சேவைகள்**

- ஒல்லாந்தரின் ஆட்சியிலே சுமார் 30 வருடங்களாக அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்த கத்தோலிக்கரின் நம்பிக்கைக்கு ஒளியூட்டினார்.
- ஒரு கூலித் தொழிலாளி போன்று வேடம் அணிந்து இலங்கைக்கு வருகைத் தந்ததோடு, பிச்சைக்காரன் வேடம் தரித்து கிறிஸ்தவர்களைத் தேடிச் சென்னார்.
- இரவு வேளைகளில் இரகசியமாக திருப்பலி ஒப்புக் கொடுத்தல், அருளடையாளங்களை வழங்குதல் மற்றும் மறையுரை ஆற்றுதல் போன்ற மறைப் பணிகளில் ஈடுப்பட்டார். இதற்காக சுதேச மொழிகளையும் கற்றுக் கொண்டார்.
- கண்டியிலே வைசூரி நோயால் பாதிக்கப்பட்டோரை பராமரித்தது மட்டுமல்லாது, அடக்கம் செய்ய யாரும் இல்லாது இறந்து போனவர்களை அடக்கம் செய்தார்.
- இலங்கைத் திருச்சபையை ஆன்மீக வாழ்விலே திடப்படுத்த ஒறற்றோரியன் சபைக் குருக்களை வரவழைத்து அவர்களோடு இணைந்து பணியாற்றினார்.
- பொதுநிலையினரை மூப்பர், அண்ணாவிமார், சங்கிறிஸ்டன் போன்ற பணிகளில் ஈடுபடுத்தி தலைமைத்தும் வழங்கினார்.
- கண்டியிலே மழையில்லாது வரட்சி ஏற்பட்டபோது, தனது கடுமையான செப, தபத்தினால் மழை பொழியச் செய்தார்.
- பல்வேறு அற்புதச் செயல்களினால் இறை அன்பை மக்களோடு பகிர்ந்துக் கொண்டு, இறையாட்சியை நிலைப்படுத்தினார்.

**இலங்கைத் திருச்சபைக்காக எம்மால் செய்யக் கூடிய செயல்கள்**

- இறைவார்த்தையை எம் வாழ்வினூடாக பிறருக்கு கொண்டு செல்லல்.
- பொதுநிலை தலைமைத்துவத்தை வலுப்படுத்த சிறார்களை பயிற்றுவித்தல் மேலும் அப்போஸ்தலிக்கப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்த உதவுதல்.
- சுதேச மொழிகளை நன்கு கற்பதன் ஊடாக இறைவார்த்தையைப் பரப்புதல்.
- தேசிய கலாச்சாரத்தினூடாக திருவழிபாட்டை அர்த்தமுள்ளதாக்குதல்.

  (உதாரணம்:- இசை, அலங்காரம், சடங்குகள், சம்பிரதாயங்கள்)
- இறைவனது திராட்சைம் தோட்டத்திலே பணியாற்ற இளைஞர், யுவதிகளை ஊக்கப்படுத்து வதோடு அவர்களுக்கான சில நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்தல்.
- பல்வேறு திட்டங்களை ஒழுங்கு செய்து, நடைமுறைப்படுத்துவதனூடாக கிறிஸ்தவர்களுக்கு பொருளாதார ரீதியாக உதவுதல்.
- பிற மதத்தவரோடு நல்லுறவையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துதல்.
- பல்வேறு வழிபாடுகள், ஆன்மீக நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதனூடாக கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வைத் திடப்படுத்துதல்.
- இறை நம்பிக்கையிலிருந்து விலகிச் சென்றவர்களை சந்தித்து, அவர்களை ஊக்குவித்து அருளடையாளங்களில், திருப்பலியில் பங்குபற்றச் செய்தல்.
- நவீன தொழினுட்பத்தை பயன்படுத்தி (தொலைபேசி, இணையம், சமூக வலைதத் தளங்கள்….) இறைவார்த்தையை மக்களிடையே பரப்புதல்.

வெளியீடு :
தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்,
1ம் மாடி, இல. 19, பல்கம் இடம்,
கொட்டா வீதி, கொழும்பு - 08.

தொலைபேசி : 011 - 2685459
தொலை நகல் : 011 - 2665021
மின் அஞ்சல் : natcatbible@gmail.com